# EVERWIN VIDHYASHRAM

**STD: VI** **Term- I TAMIL – L2**

## இயல் - 1: இன்பத்தமிழ் 1.1 - செய்யுள்

**I. வினா - விடை: குறுவினா:**

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?

அமுதம், நிலவு, மணம்.

2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

தேன், கரும்பு, தங்கம், சந்தனம், அமுதசுரபி, நவமணிகள் போன்றவற்றோடு தமிழை ஒப்பிடுவேன்.

**II. சிறுவினா:**

1. இன்பத்தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டினை எழுதுக.

தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

2. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

* நீர் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் போன்றது.
* நீரினால் விளையும் விளைச்சலினால் மக்கள் பயன் பெறுவர்

## இயல் 1.2 - தமிழ்க்கும்மி

**I. குறுவினா:**

1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

பொய்யை அகற்றுதல், அறியாமையை நீக்குதல், உயர்ந்த அறத்தை தருதல், ஆகியனவாகும்.

2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவவேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

தமிழின் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**II. சிறுவினா:**

1. காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?

பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி ஆகையால் பலநூறு ஆண்டுகளைக் கண்டு காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கிறது.

2. தமிழ்க்கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.

* அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட தமிழ்மொழி, பலநூறு ஆண்டுகளைக் கண்டது.
* இந்த உலகம் சிறந்து விளங்குவதற்கும், மக்களின் அறியாமையை போக்குவதற்கும் வழிகாட்டும் மொழியாகும்.

## இயல் 1.3 - உரைநடை: வளர்தமிழ்

**I. குறுவினா:**

1. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?

தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையானநூல். அப்படி என்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும்.

இத்தகைய காரணத்தால் தமிழ் மிகவும் தொன்மையான மூத்த மொழி எனப்படும்.

2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. வளையாபதி
4. குண்டலகேசி 5. சீவக சிந்தாமணி

**II. சிறுவினா:**

1. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?

* திணை, உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும். உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என்று கூறாமல். அஃறிணை என கூறப்படுகிறது. (அல் + திணை = உயர்வு அல்லாத திணை)
* பாகற்காய் கசப்புச்சுவை உடையது. இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்) என கூறப்படுகிறது.

2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.

தமிழ் இலக்கியங்கள் பலவும் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை. கொண்டவை.

பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்'

என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

3. தமிழ் மொழியின் சிறப்புக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

* தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்.
* தமிழ்மொழி பேசவும், படிக்கவும், எழுதவும் உகந்த மொழி.
* தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.
*இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது தமிழ் மொழி.
* தமிழ் மொழியின் பலவகைச் சீர்மைகளுள் அதன் சொற்சிறப்பு குறிப்பிடத்தக்கது. (சீர்மை - ஒழுங்கு முறை)

## இயல் 1.4 - கனவு பலித்தது

**I. வினா- விடை:**

1. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

* ஊக்கம் அளித்தல்
* ஐயங்களை தீர்த்துக்கொள்ளுதல்
* கனவுகளுக்கு உரம் ஊட்டுதல்
* ஆர்வம் * தன்னம்பிக்கை * விடா முயற்சி

2. அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

i) தொல்காப்பியம்:

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம்.

ii) திருக்குறள், பரிபாடல்:

கடல் நீர் ஆவியாகி மேகமாகும்.

iii) ஔவையார்:

திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது.

iv) நற்றிணை, பதிற்றுப்பத்து:

அறுவை மருத்துவம் பற்றி கூறுகிறது.

v) திருவள்ளுவமாலை:

தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் போன்றவை அத்தையின் கடிதக் கருத்துகள் ஆகும்.

3. கனவு பலித்தது என்ற தலைப்பு இக்கதைக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.

* அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்பது இன்சுவையின் விருப்பம். தமிழ் வழியில் படித்தால் இந்த கனவு நிறைவேறுமா? என்று அத்தையிடம் கேட்டாள்.
* நெடுங்காலமாக அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள்.
* தமிழாலும் தமிழராலும் எந்தத் துறையில் எதையும் சாதிக்க முடியும். தொடர்ந்து முயற்சி செய் என்றாள் இன்சுவையின்அத்தை.
* அத்தை கூறியபடி நூலகம் சென்று நூல்கள் பல படித்து அறிவியல் சிந்தனையைப் பெருக்கினாள்.
* விடா முயற்சியினாள் அறிவியல் அறிஞர் ஆனாள்.

எனவே ‘கனவு பலித்தது’ என்ற தலைப்பு இக்கதைக்கு பொருந்தும்.

## இயல் - 1.5 - தமிழ் எழுத்துகளின் வகைதொகை

**I. வினா- விடை:**

1. தமிழ்மொழியின் இலக்கண வகைகள் எத்தனை? அவை யாவை?

தமிழ்மொழியின் இலக்கண வகைகள் ஐந்து. அவை

*எழுத்து இலக்கணம்
*சொல் இலக்கணம்
*பொருள் இலக்கணம்
*யாப்பு இலக்கணம்
*அணி இலக்கணம்

2. மாத்திரை என்றால் என்ன?

மாத்திரை என்பது எழுத்துகளின் கால அளவைக் குறிக்கிறது. ஒரு முறை கண் இமைக்கும் நேரமும், கை நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரையின் கால அளவாகும்.

## இயல் - 2: 2.1 - சிலப்பதிகாரம்

July

**I. குறுவினா:**

1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

இயற்கை கொடைகளான நிலவு, கதிரவன், மழை முதலியவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது.

2. இயற்கை போற்றத்தக்கது ஏன்?

இயற்கையானது கடவுளால் உலக உயிரினங்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய கொடையாகும்.

இத்தகைய இயற்கையை நம்மால் மீண்டும் உருவாக்க முடியாது. எனவே இயற்கை போற்றத்தக்கது.

## இயல் - 2: 2.2 - காணி நிலம்

**I. குறுவினா:**

1. காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?

காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன:

* காணி அளவு நிலம்.
* அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் கொண்ட ஒரு மாளிகை.
* நல்ல நீரை உடைய கிணறு.

* தென்னை மரங்கள், நிலவொளி, குயிலின் குரலோசை, இளந்தென்றல்

2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக?

* முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும்.
* காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும்.
* உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும் போன்ற எண்ணங்கள் மூலம் பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பத்தை அறியலாம்.

## இயல் - 2: 2.3 சிறகின் ஓசை

I. குறுவினா:

1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?

உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலைமாற்றம், இனப்பெருக்கம் ஆகிய காரணங்களுக்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன.

2. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

* தலையில் சிறகு வளர்தல்
*இறகுகளின் நிறம் மாறுதல்.
* உடலில் கற்றையாக முடி வளர்தல்
* ஒரு வகைப் பறவையை வேறு வகைப்பறவை என்று கருதும் அளவிற்கு சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

II. சிறுவினா:

1. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

சிட்டுக் குருவி கூடு கட்டி வாழும். கூடுகட்டும் காலத்தில் சத்தமிட்டு கொண்டே இருக்கும். மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இட்டு பதினான்கு நாள்கள் அடைக்காக்கும். பதினைந்தாம் நாள் குஞ்சுகள் வெளிவரும்.

இந்தியா முழுவதும் சிட்டுக்குருவிகளைக் காணலாம். தானியங்கள், புழுபூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள் தேன் போன்றவை சிட்டுக் குருவியின் உணவாகும்.

வேகமாகப் பறக்கும் இதன் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகளாகும்.

2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?

* பறவைகள் இடம் பெயர்தலை வலசை போதல் என்பர். உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடமபெயர்கின்றன.
* நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன. வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை செல்கின்றன.
* பறவைகள் தனக்கென ஒரு வழித்தடத்தை தேர்ந்தெடுத்து அந்த பாதையிலேயே பயணம் செய்யும்.
* அதே பாதையில் தாய்நிலங்களுக்கு திரும்புகின்றன.

## இலக்கணம்
## 2.5 முதலெழுத்தும் சார்பெழுத்தும்

**I. வினா விடை:**

1. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?

சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். அவை

1. உயிர்மெய் 2. ஆய்தம் 3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம் 6. குற்றியலுகரம் 7. ஐகாரக் குறுக்கம்
8. ஔகாரக் குறுக்கம் 9. மகரக் குறுக்கம் 10. ஆய்தக் குறுக்கம்

2. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும், முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம் பெறும்?

தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒருவல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

## 2.6 திருக்குறள்

**I. குறுவினாக்கள்:**

1. உயிருள்ள உடல் எது?

அன்பு இருப்பது தான் உயிருள்ள உடல் ஆகும்.

2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?

அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கம் ஆகும்.

3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?

* அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே வேண்டும் என நினைப்பர்.
* அன்பு உடையவர்கள் தம் உடம்பையும் பிறர்க்கு கொடுத்து மகிழ்வர்.

## இயல் 3.1 அறிவியல் ஆத்திசூடி

I. குறுவினா:

1. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?

மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அனுபவ அறிவு ஆகும்.

II. சிறுவினா:

1. பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக?

* அறிவியல் சிந்தனைகளை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்.
* ஆய்வின் முடிவுகளை தொகுத்து உண்மைகளை கண்டறிய வேண்டும்.
* அறிவியலில் வெற்றி பெற ஏன் என்ற கேள்வியும் ஐயங்களையும் தெளிவுப்படுத்துதல் வேண்டும்.
* ஒற்றுமையுடன் ஓய்வின்றி உழைத்தால் அந்த அனுபவ அறிவே மனிதர்களுக்கு மருந்தாக அமையும்.

## இயல் 3.2 அறிவியலால் ஆள்வோம்

I. சிறுவினா:

1. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?

செய்தித் தொடர்புக்கும், இயற்கை வளங்களையும் புயல், மழை ஆகியவற்றை கண்டறியவும் பயன்படுகிறது.

2. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

நாளைய மனிதன் விண்ணிலுள்ள கோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான். அங்கு சென்றுவர விண்வெளியிலும் பாதை அமைத்திடுவான்.

## இயல் 3.3 கணியனின் நண்பன்

I. குறுவினா:

1. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?

'செக்' நாட்டைச் சேர்ந்தவர் காரல் கபெக். இவர் 1920 ஆம் ஆண்டு 'ரோபோ' என்னும் சொல்லை பயன்படுத்தி தம் நாடகத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். இதன் மூலம் ரோபோ என்னும் சொல் உருவானது.

2. 'டீப் புளூ' - மீத்திறன் கணினி பற்றி எழுதுக.

1997 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் உலகச் சதுரங்க வெற்றியாளர் 'கேரி கேஸ்புரோவ்' என்பவர் கலந்து கொண்டார். அவருடன் ஐ.பி.எம் என்னும் நிறுவனம் உருவாக்கிய 'டீப் புளூ' என்னும் மீத்திறன் கணினி போட்டியிட்டு வெற்றி பெற்றது.

II. சிறுவினா:

1. எந்திர மனிதனின் பயன்களை எழுதுக.

* தானியங்கிகள், பல தொழில் நிறுவனங்களில் பயன்பட்டு வருகிறது. இவை தொழிற்சாலையில் உற்பத்தி செய்தல், பழுதுகளை நீக்குதல் போன்ற பணிகளை செய்கின்றன.
* மருத்துவ துறையில் நோயின் அறிகுறிகளை கண்டுபிடிக்கவும், சிக்கலான அறுவை சிகிச்சைகளை செய்யவும் பயன்படுகிறது.
* பிற கோள்களுக்குச் சென்று ஆய்வு நடத்தவும், செயற்கை கோள்களை இயக்கவும் பயன்படுகிறது.

2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?

உலகில் மனிதர்கள் செல்ல முடியாத இடங்கள்: பெரும் கடலின் அடி ஆழம், வெப்பநிலை உறைநிலைக்கும் கீழே உள்ள இடங்களில் துருவப் பகுதிகள் உள்ளன. எனவே இத்துருவப் பகுதிகளை ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புகிறார்கள்.

## இயல் 3.4 ஒளி பிறந்தது

வினா விடை:

1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் குறிப்பிடுவன:

* உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளோம்.
* தகவல் தொழில் நுட்பத் துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றுளோம்.
* எவ்வகையான செயற்கைக் கோளையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது.
* அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னனியில் உள்ளோம்

* நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன.
* பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை ‘அக்னி’ மற்றும் ‘பிரித்வி’ ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

2. தனக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?

போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் "கார்பன் இழையை கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது.

**கடிதம்**

நீங்கள் அப்துல்கலாமிடம் கேட்க விரும்பும் வினாக்களை ஒரு கடிதமாக எழுதுக.

அனுப்புநர்:

அ, அ,அ,
ஆறாம் வகுப்பு ‘ஆ’ பிரிவு,
எவர்வின் வித்யாஷ்ரம்,
கொளத்தூர்,
சென்னை - 600 099.

பெறுநர்:

அப்துல்கலாம் அவர்கள் ,
குடியரசு மாளிகை,
புதுடெல்லி - 110001.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: ஐயம் தீர்த்தல் தொடர்பாக.

வணக்கம். சென்ற வாரம் தொழில் நுட்பக் கண்காட்சியில் பலவிதமான கேள்விகளுக்கு பதில் அளித்தீர்கள். மேலும் என்னுள் எழுந்துள்ள ஐயங்களை, கேள்விகளாக கீழே எழுதியுள்ளேன். அதனை தெளிவு படுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வினாக்கள்:

1. உங்களிடம் உள்ள பொறுமைக்குக் காரணம் என்ன?
2. மாற்றுதிறனாளிகளுக்கு பறவைகள் போல பறக்கும் சிறகுகளை அவர்களுக்கு என தனியே அமைக்க முடியுமா?
3. விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு என் போன்ற மாணவர்களை அழைத்துச் செல்வீர்களா?

நன்றி

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
XXXXX

உறைமேல் முகவரி:

பெறுநர்:

உயர்திரு அப்துல்கலாம் அவர்கள்,
குடியரசு மாளிகை,
புதுடெல்லி - 110001

## இயல் 3.5 இலக்கணம்

மொழி முதல், இறுதி எழுத்துகள்

I. வினா விடை:

1. மொழி முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?

* க,ச,த,ந,ப,ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
* ங, ஞ, ய, வ - ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசையில் ஒரு சில எழுத்துகள் மட்டுமே வரும்.
* ங - வரிசையில் ‘ங’ - என்னும் எழுத்து
* ஞ - வரிசையில் ஒரு சில எழுத்துகள் மட்டுமே வரும்.

* ய - வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ என்னும் எழுத்துகள்
* வ - வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை என்னும் எழுத்துகள்

2. மொழி இறுதியில் வராத மெய்கள் என்னென்ன?

க்,ங்,ச்,ட்,த்,ப்,ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் மொழி இறுதியில வராது.

3. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து எது?

ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

## இயல் - 4

### 4.1 மூதுரை

I. குறுவினா:

கற்றவரின் பெருமைகளாக மூதுரைக் கூறுவன யாவை?

* மன்னனையும், குறையில்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனை விடக் கற்றவரே சிறந்தவர்.
* மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு.
* கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களிலெல்லாம் சிறப்பு.

II. சிறுவினா:

1. கல்வியின் சிறப்புகளாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

* கல்வி பகுத்தறியும் திறனை மேம்படுத்துகிறது.
* கற்றவர்கள் மத்தியில் பெரும் மதிப்பை ஏற்படுத்துகிறது.
* புதிய கண்டுபிடிப்புகளுக்கு கல்வியறிவு துணையாக இருக்கிறது.
* வாழ்க்கையை நெறிப்படுத்த கல்வி உதவுகிறது.

### இயல் 4.2 துன்பம் வெல்லும் கல்வி

I. குறுவினா:

1. நாம் யாருடன் சேரக் கூடாது?

தன்மானம் இல்லாத கோழைகளுடன் நாம் சேரக் கூடாது.

2. எதை நம்பி வாழக் கூடாது?

பிறர் உழைப்பை நம்பி வாழக் கூடாது.

3. இந்தப் பாடலின் முதல் இரு வரிகள் நினைவூட்டும் திருக்குறள் எது?

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின் படி வாழ வேண்டும். அதன் மூலம் வெற்றிகளையும், விருதுகளையும், பெருமையையும் பெறலாம்.

II. சிறுவினா:

1. நாம் எவ்வாறு வாழ வேண்டும் என பட்டுக் கோட்டையார் கூறுகிறார்?

* நம் வாழ்க்கையில் நெறிமுறைகளை பின் பற்றுதல் வேண்டும்.
* பிறரிடம் பழகும் போதும், பேசும் போதும் பண்பு நெறி வேண்டும்.
* வானைத்தொடும் அளவுக்கு அறிவை வளர்ந்துக் கொள்ள வேண்டும்.
* மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழ வேண்டும்.
* பெற்ற தாயின் புகழும் நம் தாய் நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும்.

### இயல் 4.3 கல்விக்கண் திறந்தவர்

I. குறுவினா:

1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?

* பொறியியல் கல்லூரிகள்
* மருத்துவக் கல்லூரிகள்
* கால்நடை மருத்துவக் கல்லூரிகள்
* ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள்

2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.

II. சிறுவினா:

1. காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக?

* காமராசர் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் தேசியக்கொடியை ஏற்றினார்.
* அப்பொழுது ஒரு மாணவன் மயங்கி விழுந்தான்.
* மயக்கம் தெளிந்த சிறுவனிடம் அவர் 'காலையில் சாப்பிட்டாயா? என்று கேட்டார்.
* அதற்கு மாணவன் 'சாப்பிட எதுவும் இல்லை' அதனால் சாப்பிடவில்லை என்றான்.
* இந் நிகழ்வுக்குப் பின், மாணவர்களுக்கு ஒரு வேளை உணவாவது வழங்க வேண்டும் என்று எண்ணி 'மதிய உணவுத் திட்டத்தைக்' கொண்டு வந்தார்.

## இயல் 4.5 இன எழுத்துகள்

I. சிறுவினா:

1. இன எழுத்துகள் என்றால் என்ன?

 * ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.
 * ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும்.
 (எ.கா) தி ங் க ள், தெ ன் ற ல்
 * உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும்.
 (எ.கா) த ழீ இ

## இயல் 5.1
## ஆசாரக் கோவை

I. குறுவினா:

1. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?
 எந்த உயிருக்கும் துன்பம் செய்யக் கூடாது.
2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
 நாம் நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ள வேண்டும்.

II. சிறுவினா:

1. ஆசாராக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?
 * பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.
 * பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
 * இனிய சொற்களைப் பேச வேண்டும்.
 * எந்த உயிருக்கும் துன்பம் செய்யக் கூடாது
 * கல்வி அறிவு பெற வேண்டும்.
 * பிறருக்கு உதவ வேண்டும்.
 * அறிவுடையவராய் இருத்தல் வேண்டும்.
 * நற்பண்புகள் உடையவரோடு நட்பு கொள்ளுதல் வேண்டும்.

## இயல் 5.2
## கண்மணியே கண்ணுறங்கு

I. குறுவினா:

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
 * சேரநாடு * சோழநாடு * பாண்டிய நாடு
2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?
 நமது வீட்டிற்கு வந்தவரை இன்முகத்துடன் வரவழைத்து வாழை இலை பரப்பி அறுசுவை உணவை பரிமாறி உபசரிப்பர்.

II. சிறுவினா:

1. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?
 * தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ!
 * இல்லம் வந்தவரை இன்முகத்தோடு அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ?
 * குளம்வெட்டி, அணைக்கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ!
 என்று தாய் தன் குழந்தையை பாராட்டுகிறாள் .

## இயல் 5.3 தமிழர் பெருவிழா

I. குறுவினா:

1. போகிப் பண்டிகை எதற்காக கொண்டாடப்படுகிறது?
 வீட்டிலுள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்வதற்காக போகி திருநாள் கொண்டாடப்படுகிறது.
2. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?
 உழவுக்கும், உழவர்க்கும் உற்ற துணையாக விளங்குவதால் மாடுகளுக்கு உழவர்கள் நன்றி செலுத்துகின்றனர்.

II. சிறுவினா:

1. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?
 * இந்நாளில் உற்றார், உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர்.
 * குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர்.
 * பட்டிமன்றங்கள் கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர்.
 * விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கி பாராட்டுவர்.